# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு

2015–16

மானியக் கோரிக்கை எண். 53

**கே.டி. ராஜேந்திரபாலாஜி**

செய்தி மற்றும் சிறப்புத் திட்டச்
செயலாக்கத் துறை அமைச்சர்

©
தமிழ் நாடு அரசு
2015

# சிறப்புத்  திட்டச் செயலாக்கத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2015-16

## பொருளடக்கம்



| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–3 |
| 2. | துறையின் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் | 3–6 |
| 3. | கண்காணிப்பு | 6–17 |
| 4. | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை மூலம்  செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 17–30 |
| 5. | நிறைவுரை | 30–31 |
| | இணைப்பு | |

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு 2015-16

## 1. முன்னுரை:

இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகவும், வறுமையற்ற மாநிலமாகவும் மற்றும் இம்மாநில மக்கள் நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் அனுபவிப்பதற்கான வழிவகை செய்வதே தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ன் குறிக்கோளாகும்.

மேற்காணும் குறிக்கோளினை அடைய சமுதாயத்தின் ஆதரவற்ற மற்றும் நலிந்த மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, இந்த அரசு ஏராளமான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி வழங்கும் திட்டம், ஏழைகளுக்கு கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும்

திட்டம், திருமண உதவித் தொகையுடன் திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்க நாணயம் வழங்குதல், மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்குதல் மற்றும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல் ஆகியவற்றின் மூலம் ஏழ்மை மற்றும் அடித்தட்டில் உள்ளோரை, அவர்களின் மோசமான வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்க விலையில்லா சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவையன்றி, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்காக மேலும் பல கொள்கை அறிவிப்புகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை அரசு அறிவித்துள்ளது.

அரசின் அனைத்து அறிவிப்புகள் மற்றும் திட்டங்களின் முன்னேற்றங்களைக் கண்காணிக்கும் பணி மிகப்பெரும் பணியாகும். இதனைக்

கருத்திற்கொண்டு முழுமையான சமூகப் பொருளாதார வளர்ச்சியினை அடையவேண்டும் என்ற நோக்கத்துடன், அரசின் பன்முகச் சிறப்பு முதன்மைத் திட்டங்களை கண்காணிப்பதற்காகவும், ஒருங்கிணைத்திடவும், விரைந்து செயல்படுத்துவதற்காகவும் இத்துறை ஏற்படுத்தப்பட்டது.

சிறப்புத் திட்டங்களின் பயன்கள் தகுதி வாய்ந்த மக்களுக்கு, சரியாகவும், விரைவாகச் சென்றடைவதையும் உறுதி செய்வதை முனைப்புடன் கண்காணிப்பதே இத்துறையின் குறிக்கோள் ஆகும். திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்துவதற்கு அனைத்து பங்கேற்பாளர்கள் மற்றும் தொடர்புடைய அனைத்துத் துறைகளையும் இத்துறை ஒருங்கிணைக்கிறது.

## 2. துறையின் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள்:

**2.1** இத்துறையின் முதன்மைச் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் பின்வருமாறு:—

- தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து, அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களைத் திறம்படவும், சிறப்பாகவும் செயல்படுத்துவதை ஒருசேர கண்காணித்தல்.
- களஆய்வுகள் மேற்கொள்ளுதல், மண்டல ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துதல், திட்டங்களை செயல்படுத்தும்போது ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
- அரசின் திட்டங்களின் தரம் மற்றும் அளவீடு குறித்து கருத்துக்களை வழங்குதல் மற்றும் தேவைப்படும் போது சரியான நடவடிக்கை குறித்து ஆலோசனைகளை அரசுக்குத் தெரிவித்தல்.
- மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களால் அளிக்கப்படும் அறிக்கைகளைத் தொகுத்து, தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அறிக்கையாக சமர்ப்பித்தல்.

- பல்வேறு திட்டங்கள் மூலம் எதிர்பார்த்த குறிக்கோளினை எட்டுவதற்கு பிறதுறைகளுடன் ஒருங்கிணைந்து, வழிகாட்டி நெறிமுறைகளில், உரிய மாற்றம் / திருத்தங்கள் மேற்கொள்ள ஆலோசனை வழங்குதல்.
- சீரான மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம் திட்டங்களின் செயல்பாட்டினைச் செம்மைப்படுத்தல்.
- அரசு கோரும் சிறப்பு அறிக்கைகளைத் தயாரித்தல்.

**2.2** பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணிப்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டது இத்துறை என்பதால், ஒரு தீவிர கண்காணிப்பு மற்றும் திறமை கொண்ட ஆய்வு அமைப்பு மிகவும் இன்றியமையாதது என்று கருதப்படுகிறது. மேலும், திட்டங்களில் பல்வேறு கூறுகளைக் கண்காணிக்கவும், களநிலையில் ஆய்வு

செய்யவும், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் மற்றும் வருவாய்த் துறை போன்ற பல்வேறு துறைகளிலிருந்து பரந்த அனுபவமுள்ள அலுவலர்களை இத்துறை பணியமர்த்தியுள்ளது.

**3. கண்காணிப்பு:**

**3.1** எந்தவொரு சிறப்பான திட்டமாக இருந்தாலும் அதன் சீரான செயல்பாட்டினைத் தொடர்ந்து நீடிக்கச் செய்யவும், அதன் இலக்கினை அடைய, மதிப்பீடு, தொடர் ஆய்வு மற்றும் கண்காணிப்பு மிகவும் அவசியமானவை ஆகும். எனவே, ஒரு திட்டத்தின் முன்னேற்றத்தினை நிர்ணயிக்கப்பட்ட கால அளவில் ஆய்வு செய்து, திட்டம் நடைபெறும் காலத்தில், களத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்குவதை கண்காணித்தல் உறுதி செய்கிறது.

மேலும், தொடர் கண்காணிப்பானது ஒரு திட்டத்தின் குறிக்கோள் எந்த அளவு வரை எட்டப்பட்டுள்ளது என்பதை மதிப்பீடு செய்வதோடு. விவரங்களை முறையாக சேகரிப்பதற்கும், அதனை பகுத்தாய்வு செய்யவும் வழிவகை செய்கிறது.

## 3.2 அரசின் சிறப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்:

மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காகவும் மற்றும் மக்களின் நீண்டநாள் தேவைகளை நிறைவுசெய்யும் பொருட்டு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிற துறைகளிடமிருந்து காலமுறையிலான முன்னேற்ற விவரங்களைப் பெறுவதற்கு உரிய தகவல் தொழில்நுட்பங்களைக்

கொண்டு, முழுமையான உடன்நிகழ் அமைப்பினை இத்துறை உருவாக்கி உள்ளது.

## 3.3 செயல்திறன்மிக்க கண்காணிப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட நுட்பங்கள்:

செயல்திறன்மிக்க மற்றும் முழுமையான கண்காணிப்பு அமைப்பினை உறுதி செய்வதற்காக சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை பின்வரும் நுட்பங்களை வகுத்துள்ளது:–

### அ. அறிவிப்புகளைக் கண்காணித்தல்:

மேதகு ஆளுநர் உரை மற்றும் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மற்றும் மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் அறிவிக்கப்படும் சிறப்பு அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் அறிவிப்புகள் போன்ற அனைத்து அறிவிப்புகளின் முன்னேற்றங்களை இத்துறை கண்காணிக்கின்றது.

இத்துறையால் வடிவமைக்கப்பட்டு, தலைமைச் செயலகத்தின் உள்வலையதளத்தில் (intranet) நிறுவப்பட்ட, பயன்பாட்டிற்கு எளிதான மென்பொருள் மூலமாக இவ்வறிவிப்புகளின் முன்னேற்றங்களை சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து உடன் நிகழ் (online) முறையில் பெற்று இத்துறை உடனுக்குடன் பதிவு செய்து கண்காணிக்கிறது. அதற்கென அரசின் ஒவ்வொரு துறையிலும் நியமிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு அலுவலர்கள் தங்கள் துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து, அறிவிப்புகளின் முன்னேற்றத்தை மேற்குறிப்பிட்ட மென்பொருள் மூலமாக பதிவு செய்கின்றனர்.

பல்வேறு துறைகளின் மூலம் அறிவிப்புகளின் தற்போதைய முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்று அவற்றைத் தொகுத்து, வகைப்படுத்தி அரசுக்கு காலமுறை அறிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த

அறிக்கைகள் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வகையிலான கண்காணிப்பு, திட்டங்களின் ஒதுக்கீட்டினை மிகைப்படுத்தவும், விரிவுபடுத்தவும் மற்றும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் அல்லது தற்போது உள்ள திட்டங்களில் மாற்றங்களைச் செய்வதற்கும் உதவுகிறது.

### ஆ. அரசின் முதன்மைத் திட்டங்களைக் கண்காணித்தல்:

மகளிரின் வேலைப்பளுவினை எளிதாக்க, விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குதல், கிராமப்புற ஏழை எளிய மக்களின் வருமானத்தை உயர்த்துவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட கறவைப்பசு, வெள்ளாடு/செம்மறி ஆடுகள் வழங்குதல், மாணவர்களின் தொழில்நுட்பத்திறன்

இடைவெளியை குறைப்பதற்காக மடிக்கணினி வழங்குதல், ஏழைகளின் நல்வாழ்வினைப் பாதுகாத்திட முழுமையான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கருவுற்ற பெண்களுக்கு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், தேவையுள்ள மற்றும் வறிய மகளிருக்கு திருமண உதவித் திட்டம் மற்றும் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் போன்றவை இந்த அரசால் செயல்படுத்தப்படும் முதன்மைத் திட்டங்களாகும். பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகின்ற மேற்கூறிய திட்டங்களை, தொடர் கண்காணிப்பு செய்யும் பொறுப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்த அறிக்கைகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு துறைகளிடமிருந்து பெறுகின்றது. சேகரிக்கப்படும் அறிக்கைகள் இத்துறை அலுவலர்களால் முறையாக

தொகுக்கப்படுகின்றன. இந்த முன்னேற்ற அறிக்கைகள் ஆய்வுக் கூட்டங்களுக்கு அடிப்படை விவரங்களாக அமைகின்றன.

## இ. உயர்நிலை கண்காணிப்புக் குழு:

அரசின் சிறப்புத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் உயர்நிலை கண்காணிப்புக்குழு ஒன்று கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:—

**உயர்நிலை கண்காணிப்புக் குழுவின் அமைப்பு**

| வ. எண் | அலுவலரின் பதவி | நிலை |
|---|---|---|
| 1 | அரசு தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2 | அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 3 | அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | உறுப்பினர் – செயலர் |
| 4 | தொடர்புடைய துறைகளின் அரசு முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள் | உறுப்பினர்கள் |

இந்த உயர்நிலை கண்காணிப்புக் குழு முதன்மைத் திட்டங்கள் குறித்த விவரங்களை விவாதிக்கவும், எழும் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு முக்கியமான அமைப்பாகும். பொதுவாக மாதத்திற்கு ஒருமுறை கூட்டப்படும் உயர்நிலை கண்காணிப்புக் குழுவின் கூட்டங்களில் குறிப்பிட்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவற்றின் தற்போதைய நிலை, சவால்கள் மற்றும் பிரச்சினைகள் போன்றவை விரிவாக விவாதிக்கப்பட்டு, செயல்படுத்தும் துறைகள் களஅளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முடிவுகள் உடனுக்குடன் கண்டறியப்படுகின்றன.

**ஈ. மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள்:**

முதன்மைத் திட்டங்களின் செயல்பாட்டினை மாவட்ட அளவில் கண்காணிப்பதற்கென மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி

முகமையின் திட்ட இயக்குநர் போன்ற உயர் அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக மாவட்ட ஆட்சியர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஒருங்கிணைப்பு அலுவலர்கள், பிற அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றவும், அவ்வப்போது உரிய தகவல்களைப் பெற்றிடவும் மாவட்டங்களில் அச்சாணியாக செயல்பட்டு வருகின்றனர். இத்துறையின் அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ளும்போது மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் தேவையான உதவிகளை வழங்குகின்றனர்.

**உ. கள ஆய்வுகள்:**

இத்துறை அலுவலர்கள், மாவட்டங்களில் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து களஆய்வு மேற்கொண்டு அத்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்திறன் குறித்த தகவல்களை அரசுக்கு சமர்ப்பிக்கின்றனர். அரசின் திட்டங்கள், திட்டமிட்டபடி நடைபெறுவதை இத்துறை

கண்காணிக்கிறது. இக்கண்காணிப்புப்பணி, திட்டங்களின் குறிக்கோள்களை எய்துவதற்கான அளவீடு செய்யத்தக்க காரணிகளை உருவாக்குவதை உள்ளடக்கியதாகும். இதன்விளைவாக ஒவ்வொரு திட்டத்தின் வலிமை மற்றும் பயன்களை கண்டறிவதற்கு உதவிபுரிவதுடன் அத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தவும், மேம்படுத்தவும் உதவுகின்றன.

**ஊ. மண்டல ஆய்வுக் கூட்டங்கள்:**

பொதுவாக, அரசின் முதன்மைத் திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட பிற திட்டங்களின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டங்கள், மண்டல அளவில் மாவட்ட ஆட்சியர்களுடன் நடத்தப்படுகின்றன. மண்டல ஆய்வுக் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து உயரதிகாரிகள் கலந்து கொண்டு விரிவான கலந்துரையாடல்கள் மூலம், திட்டங்கள்

எவ்வாறு செம்மையாக செயல்படுத்துவது என்பதை அறிந்து பயன்பெறுகின்றனர்.

## 3.4. கண்காணிப்பு அலுவலர்கள்:

அரசுச் செயலாளர்கள்/சிறப்புச் செயலாளர்கள்/ கூடுதல் செயலாளர்கள் நிலையில் உள்ளவர்களை, மாவட்ட அளவில் கண்காணிப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. இந்த கண்காணிப்பு அலுவலர்கள், மாதந்தோறும் மாவட்டங்களில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், களஆய்வு செய்தும், மாவட்ட அலுவலர்களுக்கு திட்டங்கள் விரைவாக செயல்படுத்திட, தக்க ஆலோசனைகளையும், தீர்வுகளையும் வழங்கி வழிவகை செய்கின்றனர்.

கண்காணிப்பு அலுவலர்கள் திட்டங்கள் வாரியாக முக்கியமான கருத்துக்கள், எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள், திட்டத்தின் மேம்பாடு மற்றும் மாறுதல்கள் ஆகியவை குறித்த பரிந்துரைகளை அளிக்கின்றனர். கண்காணிப்பு

அலுவலர்களால் அளிக்கப்படும் அறிக்கைகள் இத்துறையால் தொகுக்கப்பட்டு தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

**4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

அரசின் சிறப்புத் திட்டங்களைக் கண்காணிப்பது தவிர, பின்வரும் இரண்டு முதன்மைத் திட்டங்கள் செயல்படுவதை நேரடியாக மேற்பார்வையிடுவது சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் பொறுப்பாகும்.

(i) மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்

(ii) மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குதல்

## 4.1 மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்:

மாணவர்கள், தற்போதைய வேலைவாய்ப்புச் சந்தையில் போட்டியிட ஏதுவாக, தொழில்நுட்பத் திறன்மிக்கவர்களாக உருவாக்குவதே இந்த அரசின் குறிக்கோளாகும். தேசிய மற்றும் பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதோடு, இம்மாநில இளைஞர் சமுதாயத்திற்கு, வேலைவாய்ப்பிற்கான புதிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. தற்போதைய அறிவுசார் வளங்களில், மாணவர் சமுதாயத்திற்கு கணினி என்பது கற்பதற்கான அத்தியாவசிய சாதனமாக உள்ளது. மேலும், சமூக அடித்தட்டில் உள்ள கணினி வாங்குவதற்கான பொருளாதார வசதியில்லாத மாணவ/மாணவியர்களும் கணினிசார் அறிவுத்திறனுடன் வெற்றிபெற்று வேலைவாய்ப்பினை உறுதிசெய்யும் வகையில் ஆயத்தப்படுத்த வேண்டியதுள்ளது. தகவல் தொழில்நுட்ப கல்வியறிவில்

கணினி பெற்றிருப்போர் மற்றும் கணினி இல்லாதவர்களிடையே நிலவும் இடைவெளியை அகற்றி அனைவரும் சம அளவில் போட்டியிடத் தகுந்த தளத்தினை உருவாக்கவும், விரைந்து முன்னேறும் உலகப் பொருளாதாரத்திற்கு ஏற்ப அவர்களது திறமையை வளர்க்கவும் மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் புதுமையான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மடிக்கணினியானது எளிதாக எடுத்துச் செல்லத்தக்க தனிநபர் பயன்பாட்டுக்கான கணினியாகும். இதன்மூலம் கல்விக் கொள்கை தொடர்பான மூன்று முக்கிய அம்சங்களான வாய்ப்பு, பங்கேற்பு, வெற்றிபெறல் என்பனவற்றை எய்துவதற்கும் இந்த அரசு வழி அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த மடிக்கணினித் திட்டம், அறிவுசார் வாய்ப்புகளைக் கொண்ட ஒரு புதிய உலகத்தினை இன்றைய தலைமுறை மாணவர்கள் பெற்றிட வழிவகை செய்கின்றது.

மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டமானது, நாட்டிலேயே முதல்முறையாக, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு பயனளிக்கின்ற முதன்மைத் திட்டமாகும்.

கடந்த **2011–12** மற்றும் **2012–13** ஆகிய இரண்டாண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. **2013–14**ம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாண்டு படிக்கும் மாணவர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

## ஆண்டுவாரியாக / கல்வி நிறுவனங்கள்வாரியாக மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

| ஆண்டு | பள்ளிகள் | கலை/ அறிவியல் கல்லூரிகள் | பொறியியல் கல்லூரிகள் | பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் |
|---|---|---|---|---|
| 2011–12 | 12–ம் வகுப்பு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு | இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு |
| 2012–13 | 12–ஆம் வகுப்பு | மூன்றாம் ஆண்டு | இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு |
| 2013–14 முதல் | 12–ஆம் வகுப்பு | – | – | முதலாண்டு |

மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் ஒரு மாபெரும் வெற்றித் திட்டமாகும். தமிழக அரசால் முதலில் தொடங்கப்பட்ட பல்வேறு முன்னோடித் திட்டங்களைப் போன்றே இத்திட்டமும் பிற மாநிலங்களால் பின்பற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக மடிக்கணினிகள் கொள்முதல் செய்யும் பணி ‘எல்காட்’ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மடிக்கணினிகள்,

தொடர்புடைய துறைகளான பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககங்கள் மூலமாக **2011–12** மற்றும் **2012–13** ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்டன. **2013–14**ம் ஆண்டு முதல் பள்ளிக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்ககங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற மடிக்கணினிகளில் உள்ள மென்பொருள் தொகுப்பின் ஒரு பகுதியாக "Windows" தொடக்கநிலைப் பதிப்பு, LINUX அடிப்படையில் அமைந்த "Bharath Operating System Solution" (BOSS), அகராதி, திருக்குறள் மற்றும் பல்வேறு பாடங்களுக்கான பாடத்திட்டங்கள் முதலியவை சேர்த்து நிறுவப்பட்டுள்ளன. பார்வைத் திறன் அற்றவர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினிகளில், அவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறப்பு மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. மடிக்கணினி இயக்கப்பெற்றவுடன் அரசின் சின்னம் திரையில் தோன்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல் என்ற அரசின் உயரிய முடிவானது, அவர்கள் பணிஏற்கும் ஆரம்ப நிலையிலேயே நவீன தொழில் நுட்பப் பயன்களை அரசு வழங்குகிறது. இதன்மூலம் மாணவர்கள், அடிப்படை அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள்களான Spread Sheet, Power Point Presentation and Word Processing ஆகியவற்றை விரைவாக கற்றுக்கொள்ள இயலும்.

இந்த மடிக்கணினிகளுக்கு, அதனில் உள்ள மின்கலனையும் சேர்த்து ஒரு வருட உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளன. இந்த மடிக்கணினிகள் நன்கு செயல்படுவதற்கும், பராமரிக்கப்படுவதற்கும் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்புடைய நிறுவனங்கள் மூலம் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வசதிகள் குறித்து மாணவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்கள், முதன்முறையாக நேரடியாக கணினியில் பயிற்சி பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளதால் மாணவர்களுக்கு இத்திட்டம் பெரும் மகிழ்ச்சியை அளித்துள்ளது.

மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் **2015–16**ம் நிதியாண்டிலும் தொடரப்படுவதன் வாயிலாக **5.50** இலட்சம் மாணவர்கள் பயன்பெற உள்ளனர். இதற்கென நிதிநிலை அறிக்கையில் ரூ.**1,100** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.2 மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கல்:

மகளிருக்கு அவர்களின் வேலைப்பளுவினை எளிதாக்கவும், பொருளாதாரத்தில் தங்களின் பங்களிப்பை அளித்திடவும் மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் ஆகியவற்றை

ஒரு தொகுப்பாக வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

**30.06.2011** அன்றைய தேதியில் அரிசி பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டை வைத்துள்ள ஏறத்தாழ **1.85** கோடி குடும்பங்களில் உள்ள மகளிர் படிப்படியாக இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன், அவர்களுக்கு நவீன வீட்டு உபயோக சாதனங்களை அளித்து அவர்களுக்கு சமவாய்ப்பு வழங்குவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பொதுவாக இந்தப் பொருட்கள் தகுதியுடைய குடும்பங்களில் உள்ள மகளிருக்கு வழங்கப்படுகின்றன. அரிசி பெறத்தகுதியுள்ள குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்களில் பெண் உறுப்பினர் எவரும் இல்லாத நிலையில், அந்த குடும்பத் தலைவரிடம் இப்பொருட்கள் வழங்கப்படும்.

மலைப்பகுதிகளில் மின்விசிறிகள் அதிக அளவில் பயன்படாது என்பதை கருத்திற்கொண்டு நீலகிரி மாவட்டம் முழுவதும் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் மலைப்பகுதியிலும் மின்விசிறிக்குப் பதிலாக மின்காந்த அடுப்பு (Induction Stove) வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக மின்விசிறிகள், மிக்சிகள் மற்றும் கிரைண்டர்கள் கொள்முதல் மற்றும் வழங்கல் பணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், வழங்கப்படும் இச்சாதனங்களின் தரத்தினை உறுதி செய்வதுடன் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிடங்கிற்கு நேரடியாக அனுப்பி வைக்கிறது.

சென்னை மாநகரத்தில், மாநகராட்சி ஆணையரின் கட்டுப்பாட்டிலும், பிற மாவட்டங்களில் வருவாய்த் துறை மூலம் மாவட்ட ஆட்சியர்களின்

பொறுப்பிலும் இச்சாதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சாதனங்கள் சரியான முறையில் செயல்படுவதையும், தரத்தினை உறுதி செய்வதற்காகவும் அவற்றை வழங்கும் நிறுவனங்கள் மூலம் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கும் மையங்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைத்திட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வசதிகள் உள்ளன என்பதைக் குறித்து, பயனாளிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இச்சாதனங்களுக்கு இரண்டு வருட உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

**2011–12**ம் ஆண்டில் **25** இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். **2012–13** மற்றும் **2013–14**–ம் ஆண்டுகளில் தலா **35** இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளனர். மின்விசிறிக்கு பதிலாக வழங்கப்படும் மின்காந்த

அடுப்பு, **2011–12, 2012–13, 2013–14** மற்றும் **2014–15** ஆகிய ஆண்டுகளில் முறையே **34,000, 54,000, 47,646** மற்றும் **57,801** மின்காந்த அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. **2014–15**ம் ஆண்டிற்கு **45** இலட்சம் பயனாளிகள் பயன்பெறும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2015–16**ம் ஆண்டில் ஏறத்தாழ **45** இலட்சம் பயனாளிகள் பயன்பெற உள்ளனர். இதற்கென நிதிநிலை அறிக்கையில் ரூ.**2,000** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.3 நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning - ERP):

இந்தத் துறையால் செயல்படுத்தப்படும் இரண்டு திட்டங்களான மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குதல் மற்றும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல் ஆகியவற்றின் கீழ் வழங்கப்படும் பொருட்கள் மக்களுக்குச் சென்றடைவதைக்

கண்காணிக்க நிறுவன வளத் திட்டமிடல் குறித்த ஒரு உயரிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் ஒரு மேலாண்மை மென்பொருளாகும். மேலாண்மை மென்பொருளான இம்மென்பொருள், நிறுவனத்தின் அனைத்து பணிகளையும் ஒருங்கே நிர்வகிக்க உதவுகிறது. இந்த நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருள், பொருட்கள் வாங்குதல், வழங்குதல் மற்றும் விநியோகித்தல் போன்ற அனைத்து அம்சங்களையும் ஒருங்கே உள்ளடக்கிய ஒரு மென்பொருளாகும். இந்த இரண்டு திட்டங்களுக்காக மட்டுமே இந்த மென்பொருள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் (எல்காட்) உருவாக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) ஆகியவற்றில் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்திற்கும், வருவாய்த்துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் மகளிருக்கு

மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

## 5. நிறைவுரை:

தமிழ்நாட்டில் பல்வேறு சிறந்த திட்டங்கள் நன்முறையில் உருவாக்கப்பட்டு, செம்மையாக செயல்படுத்துவதன் மூலம் ஏழை எளிய மக்களின் வாழ்வில் மாபெரும் தாக்கமும், மாற்றமும் ஏற்பட்டுள்ளன. மக்கள் நல அரசு செயல்படும் இம்மாநிலத்தில், அரசின் திட்டங்கள் மக்களின் வாழ்வில் அனைத்து கட்டங்களிலும், அதாவது ஆரோக்கியமான தாய்மார்கள் ஆரோக்கியமான மகவை பெற்றிடுவதை உறுதி செய்தல், மாணவ/மாணவியர்களது வேலைவாய்ப்புத் திறனை வளர்த்தல், மகளிரின் பணியினை எளிதாக்குதல், ஏழை எளியோருக்கு வாழ்வாதாரங்களை வழங்கி அவர்களது வருமானத்தைப் பெருக்குதல், ஊரக ஏழைமக்களுக்கு சுற்றுச்சூழலுக்குத் தகுந்த வீடுகளை

அமைத்தல், சமுதாயத்தில், கைம்பெண்கள் மற்றும் நலிவடைந்தோருக்கு உதவுதல், தேவையுள்ள அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு போன்ற சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.


மக்களின் நலனுக்காக மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்கு மற்றும் எழுச்சியூட்டும் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட இந்தச் சீர்மிகு திட்டங்கள் இத்துறையால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.


**கே.டி. ராஜே□□ரபாலா□**
**செய்தி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர்**

# மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

மொத்த மாணவர்களின் எண்ணிக்கை

(2011-12 முதல் 2015-16 வரை) – 32.15 இலட்சம்




மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்
மாவட்ட வாரியாக மொத்த மாணவர்களின் எண்ணிக்கை
(2011–12 முதல் 2015–16 வரை)
மாநில அளவில் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை – 32.15 இலட்சம்
மாணவர்களின் எண்ணிக்கை
2,50,000
2,00,000
1,50,000
1,00,000
50,000
0
பெரம்பலூர் 24,727
நீலகிரி 32,868
அரியலூர் 35,593
கரூர் 37,226
தேனி 57,855
இராமநாதபுரம் 59,373
திருவாரூர் 63,958
சிவகங்கை 64,778
நாமக்கல் 65,935
தர்மபுரி 72,256
புதுக்கோட்டை 77,896
திருப்பூர் 78,580
கிருஷ்ணகிரி 80,733
நாகப்பட்டினம் 80,800
திண்டுக்கல் 81,592
ஈரோடு 85,132
கன்னியாகுமரி 1,03,835
விருதுநகர் 1,11,647
திருவண்ணாமலை 1,12,212
திருவள்ளூர் 1,13,072
திருச்சிராப்பள்ளி 1,13,251
கடலூர் 1,16,831
தூத்துக்குடி 1,23,116
தஞ்சாவூர் 1,25,797
விழுப்புரம் 1,33,983
சேலம் 1,41,742
திருநெல்வேலி 1,46,942
கோயம்புத்தூர் 1,47,865
காஞ்சிபுரம் 1,56,941
மதுரை 1,59,288
வேலூர் 1,92,822
சென்னை 2,16,715
மாவட்டங்கள்

# மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குதல்



அரசு மைய அச்சகம், சென்னை—600 079